DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C. 185/2024 |
| Deposition of Witness for | : | P.W. 8 |
| Name | : | **ராஜ்குமார்** |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

**(வழக்கின் எதிரிகள் 1 மற்றும் 2 ஆஜர் .)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 12.03.2026

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது வர்ணப்பட்டியில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்துவருகிறேன். அ.சா.1 முத்துலெட்சுமி எனக்கு அக்கா முறை ஆவார். அ.சா.2 துரை என்ற துரைராஜ் எனது தாய்மாமன் ஆவார். அ.சா.3 முருகன் எனது மாமா ஆவார். வழக்கின் எதிரிகளை எனக்குதெரியும் . அவர்களும் எனது உறவினர் ஆவார். சுமார் 4, 5 வருடங்களுக்கு முன்பு நான் எனது ஊரில் மாலை இருந்த போது எனது மாமா துரைராஜ் என்பவரின் மகன் அஜித் என்பவர் எனக்கு போன்மூலமாக அப்பா விழுந்துவிட்டார் மருத்துவமனைக்குபோகவேண்டும் என்று அழைத்தார். நான் துரைராஜை துவரங்குறிச்சி மருத்துவமனைக்கு அழைத்துசென்றேன். எனது மாமா துரைராஜ் கையிலும் தலையிலும் காயம் இருந்தது. காயங்கள் குறித்து நான் எதுவும் கேட்கவில்லை.

எனது மாமா கிழே விழுந்து காயம்பட்டுவிட்டார் என்ற விபரம் தெரியும் மற்ற விபரங்கள் தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசுதரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக அனுமதிக்கும்படி அனுமதி வேண்டப்பட்டதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டது.)**

**அரசுத்தரப்பில் குறுக்குவிசாரணை :**

போலிசார் இவ்வழக்கு சம்மந்தமாக விசாரித்தார்கள் என்றும் விசாரணையின் போது 13.05.2020 ம் தேதி நானும் எனது மாமா துரைராஜ் என்பவரும் மதியம் 3.30 மணியளவில் புல்லாம்பட்டி மாதங்கருப்பர் கோவில் அருகே உள்ள தார்ரோட்டில் வந்து கொண்டிருந்தோம் என்றும் அப்போது எங்களுக்கு எதிரே மோட்டார் சைக்கிளில் வந்தஇருவரும் முன்விரோதம் காரணமாக எனது மாமா துரைராஜ் அசிங்கமான வார்த்தைகளால் திட்டி அருவாளால் அவரது கழுத்திலும் தலையிலும் இடது கையிலும் வெட்டி காயப்படுத்தினார் என்றும் நான் பயந்துகொண்டு எனது அக்கா முத்துலெட்சுமியிடம் வந்து விபரங்களை கூறிகொண்டிருந்தபோது எதிரி கருப்பையா அசிங்கமான வார்த்தைகளால் திட்டி எனது அக்கா முத்துலெட்சுமியை இரும்பு பைப்பால்தலையில் அடித்து காயப்படுத்தினார் என்றும் எதிரி முருகேசன் கட்டையால் எனது அக்காவின் வலது தொடையில் அடித்து காயப்படுத்தினார் என்றும் வழக்கு சம்பவம் எனக்கு நேரடியாகதெரியும் என்று போலிசார் விசாரணையில் கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சம்பவம் எனக்கு நேரடியாக தெரியும் என்றும் தற்போது எதிரிகள் கேட்டுக்கொண்டதால் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.**

N SENTHIL MURALI
Digitally signed by N SENTHIL MURALI
Date: 2026.03.12 17:47:49 +0530

**உதவி அமர்வு நீதிபதி,**

**தலைமைக் குற்றவியல் நடுவர் ,**

**சிவகங்கை.**